பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகம்
களுவாஞ்சிகுடி.

கீளின் ஸ்ரீலங்கா கால மற்றும் உபாயக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - iiiஇன்

கீழ் நடைமுறைப்படுத்தப்படும்

நான்கு வருட நடுத்தரகால அபிவிருத்திவேலைத்திட்டம் - தரம் - 2,3,4,5(4Y-MTDP-G 2345)

மாதிரிப்பரீட்சை -02 (04.03.2026) தரம்- 05

வினாத்தாள்- i

பெயர் : ..... நேரம் - 1மணித்தியாலம்

பரீட்சைக்கு தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேல் உள்ள அடைப்பிலுள் இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுங்கள்
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உங்கள் சுட்டெண்ணை எழுதுங்கள்.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.
- அறிவுறுத்தலுக்கமைய துலங்குக.
- வினாத்தாள்களில் செய்து பார்ப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கானது.

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப்புள்ளிகள்	

	குறுகிய ஒப்பமும் பெயரும்
முதலாம் பரீட்சகர் புள்ளி வழங்கும் முறையின்படி விடைத்தாள்கள் மதிப்பிடப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துகின்றேன்.	
முதலாம் பரீட்சகர் முதல் பரீட்சகர் செய்துள்ள மதீப்பீடு சரி என உறுதி செய்கின்றேன்.	
மதிப்பீட்டு புள்ளி உறுதியுரையில் பரீட்சகர் மதீப்பீடு செய்து அளித்துள்ள புள்ளியும் இறுதிப்புள்ளியும் சரி என உறுதி செய்கின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளி சரியானது.	

திருமதி.சுதாஜினி ஜினேஸ்குமார்
மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்.
களுவாஞ்சிகுடி.
0757566748

www.ikedu.lk

LEARNEASY

KNOWLEDGE IS POWER

தமிழ் & English Medium

தரம் 01 முதல் A/L

வரையான வகுப்புக்கள்

ZOOM ஊடாக நடைபெறுகின்றன



தரம் 01 முதல் 05 வரை

- தமிழ்
- கணிதம்
- ஆங்கிலம்
- சுற்றாடல்
- நுண்ணறிவு
- வினாத்தாள் வகுப்பு
- பேச்சு ஆங்கிலம்
- பேச்சு சிங்களம்




தரம் 06 முதல் O/L வரை


- தமிழ்
- கணிதம்
- ஆங்கிலம்
- விஞ்ஞானம்
- வரலாறு
- வர்த்தகம்
- ICT
- English Literature
- தமிழ் இலக்கியநயம்
- சுகாதாரம்
- புவியியல்
- குடியியல்

76667-4945

01. தரப்பட்ட படத்தினை அவதானித்து அது தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க.




1) வண்ணத்துப்பூச்சிகள் சில பறக்கின்றன
2) இரண்டு சிறுவர்கள் பந்து விளையாடுகின்றனர்.
3) மூன்று அன்னங்கள் நீரில் நீந்துகின்றன.

02. 

இக்கணிதச் செய்கையின்படி  இக்குறியீட்டின் பெறுமானம்

1. 115
2. 125
3. 135

03. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தென்படும் கடிகாரம் கீழே தரப்பட்டுள்ளது. அதன் உண்மை நேரம் யாது?



1. 10.20
2. 10.40
3. 1.20

04. 2m நீளமும் 2m அகலமும் கொண்ட சுவர் ஒன்றிற்கு வர்ணம் பூசுவதற்கு 2l தீந்தை தேவை எனின், 4m பக்க நீளம் கொண்ட சதுர சுவரிற்கு வர்ணம் பூசுவதற்கு தேவையான தீந்தையின் அளவு யாது?

1. 12l
2. 8l
3. 4l

05. கமலாவைப் போன்று விமலா தமிழ்ப்பாடத்தை மாத்திரம் விரும்புபவள் அன்று. ---A--- உம் வேறு பாடங்களை விரும்பாத நிமலா கணித பாடத்தை விரும்புகின்றாள் ஆங்கிலப் பாடம் ---B--- விரும்பும் ஒரு பாடமன்று. இப்பந்தியில் A, B ஆகிய வெற்றிடங்களுக்கு முறையே பொருத்தமான சொற்சோடி எது?

1) கமலா, விமலா
2) விமலா, நிமலா
3) நிமலா, விமலா


www.lkedu.lk

(பக்கம் 3ஐ பார்க்க)

06. ஒரு வகுப்பில் ஏழு பேர் உள்ளனர் அவர்களில் இருவர் ஒரே நாளில் பிறந்தவர்கள். இருவருமே தங்கள் நண்பர்கள் அனைவரிடமிருந்தும் வாழ்த்து அட்டைகளைப் பெற்றிருந்தால் வகுப்பில் எத்தனை வாழ்த்து அட்டைகள் பரிமாறப்பட்டிருக்கும்?

1) 42 2) 14 3) 12

07.



P,Q,R,S,T ஆகிய 5 புள்ளிகளை ஒன்றோடு ஒன்று தொடர்புபடும் வகையில் நேர் கோடுகளால் இணைப்பதற்கு ஆகக்குறைந்தது எத்தனை நேர்கோடுகள் பயன்படுத்த முடியும்?

1) 10
2) 20
3) 30

♦ **2026 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வியாழக்கிழமை ஆகும். அதற்கேற்ப 8ஆம் 9ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க**

08. 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ள புதன்கிழமைகளின் எண்ணிக்கையும் வியாழக்கிழமைகளின் எண்ணிக்கையும் முறையே

1) 4, 4 2) 4, 5 3) 5, 5

09. 2026 ஆம் ஆண்டில் 365 நாட்கள் உள்ளன. எனின், அவ்வாண்டில் எத்தனை வியாழக்கிழமைகள் இருக்கும்?

1) 48 2) 52 3) 53

10. 20 வினாக்கள் கொண்ட ஒரு வினாத்தாளில் ஒரு வினாவுக்கு சரியாக விடையளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். பிழையாக விடையளித்தால் 1புள்ளி கழிக்கப்படும். ஒரு மாணவன் 64 புள்ளிகளைப் பெற்றானாயின் அவன் சரியாக விடையளித்த வினாக்களின் எண்ணிக்கை யாது?

1) 15 2) 14 3) 11

11. அப்பியாசக் கொப்பியொன்றின் சரி நடுவில் கம்பியைப் பயன்படுத்தி தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன. அக்கொப்பியில் 40 தாள்கள் உள்ளன. அதிலிருந்து 17 ஆம், 18 ஆம் பக்கங்களைக் கொண்ட தாள் கிழித்து எடுக்கப்பட்டது. எனவே அதனுடன் இணைந்து கழன்று விழக்கூடிய வேறுதாளுக்குரிய பக்க இலக்கங்கள் எவை?

1) 73, 74 2) 65, 66 3) 63, 64


12. கம்பித்துண்டொன்றை இரண்டு துண்டுகளாக வெட்டுவதற்கு ரூபாய் 35.00 செலவானது. எனின், அக்கம்பித்துண்டை 5 துண்டுகளாக வெட்டுவதற்கு செலவாகும் பணம் எவ்வளவு?

1) ரூபாய் 140.00 2) ரூபாய் 175.00 3) ரூபாய் 35.00

(பக்கம் 4ஐ பார்க்க)

www.lkedu.lk

13.



உருவில் ஒரு சிறிய காணி ஏழு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ள விதம் காட்டப்பட்டுள்ளது. பொது எல்லையின் இரு பக்கங்களிலும் இருக்கும் பகுதிகளில் ஒரே வகைப் பூக்கள் இருக்காதவாறு இவ் ஏழு பகுதிகளிலும் வளர்ப்பதற்கு குறைந்த பட்சம் எத்தனை வகைப் பூக்கள் தேவை?


1) 3
2) 4
3) 5

14. பின்வரும் அட்டவணையில் உள்ள வெற்றிடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் இடம்பெறும் விடையினைத் தெரிவுசெய்க.

விவசாயி	(2)	வயல்
(1)	அத்தாங்கு	கடல்
விளையாட்டுவீரன்	(3)	மைதானம்

1) மீனவன், கலப்பை, துடுப்பு
2) கலப்பை, பந்து, மீன்
3) குல்லம், மீனவன், துடுப்பு

15. ஒரு தராசின் மூலம் A, B, C என்னும் பொருள்களின் நிறைகள் அளக்கப்பட்ட மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.




அதற்கேற்ப A, B, C ஆகிய மூன்று பொருள்களினதும் நிறைகள் முறையே

1) 400g, 500g, 550g 2) 400g, 600g, 800g 3) 450g, 550g, 600g

16. A என்பவர் ஒரு வேலையை 3 நாட்களிலும் B என்பவர் அதே வேலையை 6 நாட்களிலும் முடிப்பர் எனின், இருவரும் ஒன்றாகச் சேர்ந்து அவ்வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?

1) 2 2) 3 3) 6

17. 

கீழே தரப்பட்ட உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை.

1) 9
2) 10
3) 14

www.lkedu.lk

(பக்கம் 5ஐ பார்க்க)

18. ஒரு பாத்திரத்தில் $\frac{1}{4}$ இற்கு சீனியை இட்டதும் அவற்றின் நிறை 300g ஆகும். அப்பாத்திரத்தை முற்றாக சீனியினால் நிரப்பும் போது நிறை 900g ஆகும். எனின், வெறும் பாத்திரத்தின் நிறை யாது?
1) 75g 2) 100g 3) 200g

19. ஒரு நோயாளிக்கு ஒரு வேளை கால் மாத்திரை வீதம் நாளொன்றுக்கு நான்கு வேளை மருந்து கொடுக்கப்படுகிறது. அந்த நோயாளிக்கு 12 நாட்களுக்குத் தேவையான மருந்து மாத்திரைகளின் எண்ணிக்கை.
1) 6 2) 12 3) 16

20. குமாரின் வயது ஒரு வருடமாக இருந்தபோது கண்ணனின் வயது 3 வருடங்களாக இருந்தது. தற்போது இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 28 வருடங்கள் எனின், குமாரின் தற்போதைய வயது எத்தனை வருடங்கள்
1) 7வருடங்கள் 2) 13 வருடங்கள் 3) 21 வருடங்கள்

21. 2m நீளமும் 1m அகலமும் உடைய நிலத்தைத் துப்பரவு செய்ய 1000 ரூபாயை கூலியாகப் பெறும் நபரொருவர் 4m நீளமும் 2m அகலமும் உடைய நிலத்தைத் துப்பரவு செய்ய எவ்வளவு பணத்தைக் கூலியாகப் பெற்றுக்கொள்வார்?
1) 4000 ரூபாய் 2) 3000 ரூபாய் 3) 2000 ரூபாய்

22. என்னிடம் காணப்படும் புத்தகங்களில் 9ஐத் தவிர ஏனையவை ஆங்கிலப்புத்தகங்கள் ஆகும். 7ஐத் தவிர ஏனையவை கணிதப்புத்தகங்கள் ஆகும். 6ஐத் தவிர ஏனையவை தமிழ்ப்புத்தகங்கள் ஆகும். எனின், என்னிடமுள்ள புத்தகங்கள் எத்தனை?
1) 22 2) 11 3) 7

23. விமலின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 800m ஆகும். அவன் காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது மொத்தத் தூரத்தில் கால்வாசிக்குச் சென்று திரும்பி வீட்டுக்கு வந்து மறுபடியும் பாடசாலைக்குச் சென்றான். அவன் சென்ற மொத்தத் தூரம் யாது?
1) 1200m 2) 600m 3) 1000m

24. 24m உயரமான வழுக்குமரம் ஒன்றில் ஏறும் ஒருவர் ஒரு தடவை ஏறும் போது 4m ஏறி 2m சறுக்குவார். அவர் ஒவ்வொரு தடவை ஏறுவதற்கு 4 நிமிடங்களும் சறுக்குவதற்கு 2 நிமிடங்களும் செலவு செய்தார் எனின், எத்தனை நிமிடங்களில் வழுக்கு மரத்தின் உச்சியை அடைவார்?
1) 11 நிமிடம் 2) 64 நிமிடம் 3) 66 நிமிடம்

www.ikedu.lk

(பக்கம் 6ஐ பார்க்க)

LEARN EASY
KNOWLEDGE IS POWER

தரம் 6

2026

புதிய பிரிவு

THE PIONEER IN ONLINE CLASSES

பிரிவு 2

தமிழ்
செவ் : 8PM
சனி : 8PM

கணிதம்
திங் : 8PM
புதன் : 8PM

விஞ்ஞானம்
சனி : 6PM
ஞாயி : 6PM

வரலாறு
புதன் : 7PM
வெள் : 7PM

சிங்களம்
வியா : 7PM
ஞாயி : 8PM

ENGLISH
Tue : 6PM
Thur : 6PM

ICT
Wed : 6PM
Fri : 6PM

zoom

76667-4945

1 பாடம்	5 பாடங்கள்	7 பாடங்கள்
800/-	3,000/-	4,200/-
மாதம்	மாதம்	மாதம்

25. ஒரு குறிப்பிட்ட வருடமானது புதன்கிழமை ஆரம்பித்து வியாழக்கிழமை நிறைவடைந்தது. எனின், அவ்வருடமாக அமையக்கூடியது.
    1) 2022 2) 2023 3) 2024

26. கமல் பாடசாலைக்கு அருகில் வசித்து வருகிறான் எனினும் பல நாட்களாகப் பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லை. அவன் பாடசாலைக்கு சமுகமளிக்காமைக்குக் காரணமாக இருக்கக் கூடியது.
    1) பாடசாலைப் பேருந்து வராதிருந்தமை
    2) கமல் சுகவீனமுற்று இருந்தமை
    3) பாடசாலை விடுமுறைக் காலமாக இருந்தமை

27. முதலாம் நிரை : 5 30 35 ....

    இரண்டாம் நிரை : 10 25 40 ....

    மூன்றாம் நிரை : 15 20 45 50 .....

    மேற்குறித்த கோலத்திற்கேற்ப எண்களை எழுதும் போது 70 எந்த நிரையில் எழுதப்பட வேண்டும்?
    1) முதலாம் நிரை
    2) இரண்டாம் நிரை
    3) மூன்றாம் நிரை


28. வியாபாரி ஒருவர் ரூபாய் 45.00 இற்கு மாம்பழம் ஒன்றை வாங்கி ரூபாய் 60.00 இற்கு விற்றார். அவர் விற்ற பழங்கள் 10 எனின், அவருக்குக் கிடைத்திருக்கும் இலாபம் எவ்வளவு?
    1) ரூபாய் 150.00 2) ரூபாய் 250.00 3) ரூபாய் 600.00

29. தரப்பட்ட வாக்கியங்களை கருத்துடையதாக்குவதற்கு இரண்டு சொற்களை மாற்ற வேண்டும். அவ்வாறு மாற்றம் செய்ய வேண்டிய சொற்களைத் தெரிவு செய்க.

    கமலாவின் தம்பி வைத்தியசாலைக்குச் சென்று பாடம் படித்தான்.

    விமலாவின் தங்கை சந்தைக்குச் சென்று சிகிச்சை பெற்றாள்.
    1) வைத்தியசாலை என்பதற்குப் பதிலாக சந்தை எனவும் சந்தை என்பதற்குப் பதிலாக பாடசாலை எனவும் மாற்ற வேண்டும்.
    2) வைத்தியசாலை என்பதற்குப் பதிலாக பாடசாலை எனவும் சந்தை என்பதற்குப் பதிலாக பூங்கா எனவும் மாற்ற வேண்டும்.
    3) தம்பி என்பதற்குப் பதிலாக தங்கை எனவும் தங்கை என்பதற்குப் பதிலாக வைத்தியர் எனவும் மாற்ற வேண்டும்.


30.



படத்தில் A, B எனும் எழுத்திற்கு வரவேண்டிய எண்கள் முறையே,
1) A = 34, B = 8
2) A = 33, B = 7
3) A = 34, B = 7

www.kedu.lk

(பக்கம் 7ஐ பார்க்க)

31. 

பிராணிகள், தாவர உண்ணிகள், ஊன் உண்ணிகள், முயல் என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டுவதற்கு இவ்வுரு வரையப்பட்டுள்ளது. இவ்வுருவில் முயலைக் குறித்துக் காட்டும் எழுத்து.

1) B
2) C
3) D

32. 11 மாணவர்களின் சராசரி நிறை 54kg ஆகும். அக்குழுவில் 44kg நிறையுடைய மாணவன் ஒருவன் வெளியேறினால் தற்போது குழுவிலுள்ள மாணவர்களின் சராசரி நிறை யாது?

1) 55kg 2) 44kg 3) 50kg

33. P,Q,R என்னும் மூன்று மரங்களில் பறவைகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

- மரம் R இல் இருக்கும் பறவைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க இருமடங்கு பறவைகள் மரம் Q இல் இருக்கின்றன.
- Q, R ஆகிய இரு மரங்களிலும் உள்ள பறவைகளின் மொத்த எண்ணிக்கை P இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கைக்குச் சமம்.
- மரம் Q இல் இருந்து இரண்டு பறவைகள் மரம் R இற்குப் பறந்து சென்ற போது மரம் Q இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை ஆறு ஆகும்

மரம் P இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை யாது?

1) 6 2) 9 3) 12

34. மணியொன்று மூன்று நிமிடங்களுக்கு ஒருமுறை ஒலிக்கும். இன்னொரு மணி நான்கு நிமிடங்களுக்கு ஒருமுறை ஒலிக்கும். இரண்டு மணிகளும் மு.ப. 10.00 மணிக்கு ஒன்றாக ஒலித்தது எனின், மீண்டும் எத்தனை மணிக்கு ஒன்றாக ஒலிக்கும்

1) பி.ப. 10.24 2) மு.ப. 10.24 3) மு.ப. 10.30

35. ஒரு நிலைக்குத்துச் சுவரில் தொங்கவிடப்பட்டுள்ள ஒரு சுவர்க்கடிகாரத்தின் நேரம் 3.00 ஆக இருக்கும் போது அதன் மணித்தியால முள் வடக்கு நோக்கி இருக்கின்றது. இக்கடிகாரத்திற்கு நேரடியாக முன்னால் நின்றுகொண்டு நேரத்தைப் பார்க்கும் ஒருவர் எத்திசையை நோக்கி நிற்பார்?

1) கிழக்கு 2) தெற்கு 3) மேற்கு

www.lkedu.lk

(பக்கம் 8ஐ பார்க்க)

36. தாயினதும் மகளினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 45 வருடங்கள் ஆகும். அதேவேளை தாயினதும் மகளினதும் வயதுகளுக்கிடையேயான வித்தியாசம் 21 வருடங்கள் எனின், மகளின் வயது யாது?

1) 12 வருடங்கள் 2) 24 வருடங்கள் 3) 33 வருடங்கள்


37. மூன்று வகுப்புக்களில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 46, 47, 48 ஆகும். அவற்றில் ஒரு வகுப்பில் பெண்களின் எண்ணிக்கையைவிட 3 ஆண் பிள்ளைகள் கூடுதலாக உள்ளனர் எனின், அவ்வகுப்பில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை யாது?

1) 46 2) 47 3) 48


38. ரிதண் மூன்று மாலைகளைக் கட்டும் நேரத்தில் டிதண் இரண்டு மாலைகளைக் கட்டுவான். இருவரும் சேர்ந்து அறுபது மாலைகளைக் கட்டினார்கள் எனின், ரிதண் மற்றும் டிதண் கட்டிய மாலைகளின் எண்ணிக்கைகள் முறையே

1) 24, 36 2) 40, 20 3) 36, 24

39. ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியின் உரு இங்கு காணப்படுகின்றது. அதன் முகங்களில் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. இதனை ஒரு சதுரமுகியாக மறுபடியும் தயர் செய்யும் போது எதிர் முகங்களில் இருக்கும் எண்களுக்கிடையே ஒரு தொடர்பை இனங்காணலாம். அத்தொடர்பிற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.



1) 23 2) 24 3) 25

40. 

10l கொள்ளளவுடைய நீர்ப்பாத்திரம் முழுமையாக நீரினால் நிரப்பப்பட்டு, பின்னர் A, B ஆகிய இரு துளைகளினூடாக நீர் வெளியேற்றப்படுகின்றது. துளை A இன் ஊடாக நிமிடம் ஒன்றுக்கு 200ml நீரும் துளை B இன் ஊடாக 300ml நீரும் வெளியேறும் எனின், பாத்திரத்திலுள்ள நீர் முழுமையாக வெளியேற எடுக்கும் நேரம் யாது?

1) 20 நிமிடம் 2) 32 நிமிடம் 3) 40 நிமிடம்

www.ikedu.lk

ஆசிரியர் :- திருமதி.சுதாஜினி ஜினேஸ்குமார்

பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகம்
களுவாஞ்சிகுடி.

கீளின் ஸ்ரீலங்கா கால மற்றும் உபாயக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - iiiஇன்

கீழ் நடைமுறைப்படுத்தப்படும்

நான்கு வருட நடுத்தரகால அபிவிருத்திவேலைத்திட்டம் - தரம் - 2,3,4,5(4Y-MTDP-G 2345)

மாதிரிப்பரீட்சை -02 (04.03.2026) தரம்- 05

வினாத்தாள்- ii

பெயர் : ..... நேரம் - 1மணித்தியாலம் 15நிமிடங்கள்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

★ உமது சுட்டெண்ணைமேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும்புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

★ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

★ இவ்வினாத்தளில் 60 வினாக்கள் உள்ளன.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைக் குறிப்பிடுக.

★ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் வழங்கிய மதிப்பீட்டுப்புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்தகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளி சரியாகும்.	

திருமதி.சுதாஜினி ஜினேஸ்குமார்
மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்.
களுவாஞ்சிகுடி.
0757566748

www.ikedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

ICT

Grade 6 to O/L

zoom



76667-4945

BY : A.Nivethika

Grade 6

Wed:6PM

Fri:6PM

Grade 7

Fri:7PM

Sun:7PM

Grade 8

Wed:8PM

Sat:8PM

Grade 9

Mon:9PM

Thur:9PM

Grade 10

Mon:7PM

Thur:7PM

Sun:8PM

Grade 11

Tue:8PM

Wed:7PM

Fri:8PM

1) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மழைக்காலத்தில் வனங்கள் தண்மை மிக்கனவாகக் காட்சியளிக்கும். அக்காலத்தில் மரங்கள் எல்லாம் பச்சைக் கம்பளம் விரித்தது போல காணப்படும். திறந்த வெளிகளில் புற்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும். குழிகளில் எல்லாம் நீர் நிறைந்திருக்கும். நதிகளிலோ குளங்களிலோ மிருகங்கள் தண்ணீர் குடிக்க செல்லும் நிலையை நாம் காணமுடியாது. நன்றாக விளைந்த கிழங்குகள் வேர்கள் இலைகள் என்பவற்றை சுவைத்து உண்டு பருத்த பன்றிகளோடு மான்களும் அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. களிறுக்கூட்டம் நதிக்கரைகளில் நின்று ஆரவாரம் செய்யாது காட்டினுள்ளே ஆடியசைந்து செல்வதையும் காணலாம்.

i) இங்கு இடப்பெற்றுள்ள இணைமொழிச்சசொல் ஒன்று தருக.

.....

ii) அமைதி என்பதன் எதிர்க்கருத்துச்சொல் யாது?

.....

iii) சினைப்பெயர்ச்சொற்கள் இரண்டு தருக.

.....

iv) பிடி என்பதன் ஆண்பாற் சொல்லை எழுதுக.

.....

v) அ.்றிணை பன்மை நிகழ்கால வினைச்சசொல் ஒன்று தருக.

.....

vi) தன்மைப்பெயர்ச்சொல் ஒன்று தருக.

.....

vii. வினையடைமொழிச்சொல் ஒன்று தருக.

.....

2) பன்வரும் ஒவ்வொரு வாக்கியத்திற்கும் பொருத்தமான சரியான பயனிலைச் சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i. யானைக்கூட்டம் நடந்து ..... (சென்றது / சென்றன)

ii. வண்ணத்துப்பூச்சிகளும் தேனீக்களும் தேனைக் ..... (குடிக்கின்றன/ குடிக்கின்றது)

iii. அன்னங்கள் குளத்தில் ..... (நீந்துகின்றன / நீந்துகின்றது)

iv. தொழிலுக்கா பலர் தூர இடங்களுக்கு ..... (செல்கின்றான் / செல்கின்றனர்)

v. இரவில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் ..... (மின்னின / மின்னியது)

3) பின்வரும் வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

i. நான் பேராதனைப் பூங்காவைப் பார்க்கப் போனேன்.

.....

ii. அப்பா நேற்று வயலுக்குச் சென்றார்.

.....

4) பின்வரும் ஒவ்வொரு பெயர்ச்சொல்லுக்கும் உரிய பெயர்ச்சொல் வகையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

i) கண்டி :-.....

ii) மார்கழி :-.....

www.lkedu.lk

05) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுத்துப்பிழைகள் கொண்ட இரண்டு சொற்கள் உள்ளன. அந்தச் சொற்களை மட்டும் திருத்தி உரிய புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

i) கிராமிய விலையாட்டுக்கள் வீறத்தையும் விவேகத்தையும் வெளிப்படுத்துவன.

....

ii) வைத்தியரின் அரிவுறை பயணுள்ளதாக அமைந்தது.

....

06) தரப்பட்டுள்ள இணைமொழிச் சொற்களைப் பூரணப்படுத்துக.

i) அல்லும் :-.....

ii) இன்ப :-.....

07) சரியான விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

i) தன்மை ஒருமை இறந்தகால வினைச்சொல் (வருகிறேன் / வந்தேன் / வருவேன்)

.....

ii) படர்க்கை நிகழ்கால பன்மை வினைச்சொல் (வந்தான் / வருவார்கள் / வருகின்றார்கள்)

.....

08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உரிய இடங்களில் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

நீர்வளம் குறைந்த நிலத்தை வானம் பார்த்த பூமி என விவசாயிகள் கூறுவர்

09) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

i) ஆற்றல் / மனிதனுக்கே/ ஒரு / மொழி / கொடையாகும் / அமைந்த / சிறப்பாக

.....

10) ஒவ்வொரு உருவுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை தரப்பட்டுள்ள கூட்டினுள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.





www.lkedu.lk

11) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

1. mouth / a / It / small / has

.....

2. come / I / tomorrow / will

.....

12) ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

1. Nationalflag .....
2. Squirrel .....

13) 'மித்துரா' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.

.....

14) பின்வரும் வாக்கியத்தை சிங்களத்தில் கூறும் முறையை **தமிழில்** எழுதுக.

உங்கள் கதிரை எது? .....

15) 30099 என்னும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டினால் வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

.....

16) 17326, 19326, 10279 என்னும் மூன்று எண்களையும் இறங்கு வரிசைப்படுத்தி எழுதுக.


.....

17) 8m நீளமுள்ள கயிறு ஒன்றிலிருந்த 2m 55cm நீளமுள்ள கயிறு வெட்டி அகற்றப்பட்டது எனின், எஞ்சியுள்ள கயிற்றின் அளவு யாது?

.....

18) ஒரு பையில் 8kg 700g உருளைக்கிழங்கு இருந்தது. அப்பையில் மேலும் 9kg 350g உருளைக்கிழங்கை இட்டால் பையிலுள்ள உருளைக்கிழங்கின் மொத்தநிறை எவ்வளவு?

.....

19) 

பின்வரும் திண்ம உருவில் உள்ள

1)முகங்கள் எத்தனை? .....

2)விளிம்புகள் எத்தனை? .....

■ **கடை ஒன்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விலைப்பட்டியலுக்கு ஏற்ப 20, 21 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.**

பொருட்கள்	1kg இன் விலை	
	ரூபாய்	சதம்
சீனி	240	00
பருப்பு	135	50
கோதுமை	190	50
அரிசி	250	00

20) 2kg சீனியும் 1kg பருப்பும் வங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

.....

21) 2kg கோதுமையும் 500g சீனியும் வாங்கும் ஒருவர் 500 ரூபாய் நாணயத்தாளைக் கொடுத்தால் அவருக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

.....

22) 0.3 என்பதை பின்னத்தில் எழுதுக.

www.ikedu.lk

23)கொழும்பிலிருந்து முற்பகல் 8.00 மணிக்கு பயணத்தை ஆரம்பித்த புகையிரதம் அதே நாள் பிற்பகல் 5.55 இற்கு மட்டக்களப்பை வந்தடைந்தது எனின், புகையிரதம் பயணத்திற்காக எடுத்த நேரத்தை மணித்தியாலம் நிமிடங்களில் தருக.

.....

24) எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் எழுதுக.

1, 4, 16, 64, ..., ...


25) 78921 எனும் எண்ணில் இலக்கம் 8 உள்ள இடம் யாது?

.....

26) ஒருவருக்கு 7 வீதம் 434 பேனைகளை எத்தனை மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்க முடியும்?

.....

27) உருவில் உள்ள பாத்திரம் Aயில் 2l 500ml நீரும் பாத்திரம் Bயில் 1l 500ml நீரும் உள்ளன.இரு பாத்திரங்களிலும் உள்ள நீரின் அளவு சமமானதாக இருப்பதற்கு பாத்திரம் A இல் இருந்து பாத்திரம் Bஇற்கு ஊற்ற வேண்டிய நீரின் அளவு யாது?




.....

28) கட்டத்தில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய ஐந்திலக்க சிறிய எண்ணுக்கும் பெரிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

5		9
	3	
0		1

.....

29) பின்வரும் வரைபில் தரம் - 5 வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவரும் விரும்பும் பாடங்கள் பற்றிய தகவல்கள் காட்டப்பட்டுள்ளன. எனினும், ஆங்கிலப்பாடத்தை விரும்புவோரின் எண்ணிக்கை மட்டும் வரைபில் காட்டப்பவில்லை.



1)தமிழ்ப்பாடத்தைவிட கணித பாடத்தை எத்தனை மாணவர்கள் குறைவாக விரும்புகின்றனர்?

.....

2) வகுப்பில் 48 மாணவர்கள் இருக்கிறார்கள் எனின், ஆங்கிலபாடத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....

30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

30) ஸ்ரீ விக்கிரம் சர்வ சித்தி எனும் பெயரில் மூன்று பிரதேசங்களுக்கும் அரசனாக முடிசூட்டி அபிசேகம் செய்யப்பட்டவர்

1. மொனரவில கெப்பெட்டிப்பொல திசாவ
2. கொங்காலே கொட பண்டா
3. வண. எஸ் மகிந்த

31) நீரூற்றுக்களைப் பாதுகாக்க உதவும் மரமாக அமைவது

1. இலுப்பை
2. ஆலமரம்
3. மருதமரம்

32) இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது அதிவேகப் பாதை

1. தெற்கு அதிவேகப்பாதை
2. கட்டுநாயக்க அதிவேகப்பாதை
3. கொழும்பு - கண்டி அதிவேகப்பாதை

www.ikedu.lk

Teach : **S.Farwin**

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Online Class zoom



இரண்டாம் மொழி

சிங்களம்

தரம் 6	Mon 6 PM || Thur 7 PM
தரம் 7	Mon 6 PM || Thur 6 PM
தரம் 8	Fri 8 PM || Sat 8 PM
தரம் 9	Fri 8 PM || Sat 7 PM

தரம் 6-9

76667-4945

மாதம்
800/-

33) பொதுப்போக்குவரத்து வாகனத்தில் பயணிக்கும் நபர் பேணவேண்டிய நற்பழக்கமாக அமையாதது.
1. மதிபலகையில் பயணம் செய்யாதிருத்தல்
2. வெளியே பிறபொருள்களை எறியாதிருத்தல்
3. வாகனங்களில் பல்வேறு வாசகங்களை எழுதுதல்

34) நாகமரப்பூங்கா அமையப்பெற்றுள்ள மாகாணம், மாவட்டம் என்பவற்றை முறையே கொண்ட விடை.
1. வடமத்தி, அனுராதபுரம் 2. மத்தி, கண்டி 3. வடமேல், குருநாகல்

35) தேசப்படத்தில் இக்குறியீடு குறிப்பது.
1. பெருந்தெரு 2. அதிவேகப்பாதை 3. புகையிரதப்பாதை

36) பிராணிகள் மூலம் மனிதனுக்குக் கிடைக்கும் நன்மைகளாக அமைவன.
1. மருந்துப்பொருள் கிடைத்தல், சூழலை அழகுபடுத்தல்
2. வித்துப்பரம்பலடைதல், பழங்கள் கிடைத்தல்
3. வாழிடம் கிடைத்தல், களிப்பூட்டல்

37) தாவரங்களில் பிரதானமாக எப்பகுதியில் உணவு உற்பத்தி செய்யப்படும்?
1. பூ 2. இலை 3. வேர்

38) இலங்கைக்கே உரிய மீனினம், நகருயிர் என்பவற்றை முறையே காட்டுவது.
1. மள்புளுட்டா, கலவத்தன்
2) புலத்ஹய்யா, கொம்பு ஓணான்
3. நீர்ப்பாம்பு, சுண்டெலி

39) நாட்டு மண்ணின் செழுமையை நீக்கும் நோக்குடன் எரித்து அழிக்கப்பட்ட தாவர வகையாக அமைவது.
1. இலுப்பை 2. வாகை 3. மருதமரம்

40) பின்வரும் குறியீடு உணர்த்தும் கருத்து
1. முதியோர்களுக்காக
2. வலது குறைந்தவர்களுக்காக
3. வைத்தியர்களுக்காக

41) தண்டுத்துண்டங்களை நடுவதன் மூலம் புதிய தாவரங்களை பெறக்கூடியதும் வித்துக்களை நடுவதன் மூலம் புதிய தாவரங்களைப் பெறக்கூடியம் முறையே கொண்ட விடைத்தொகுதி
1. சோளம், வற்றாளை 2. மரவள்ளி, வெண்டி 3. பசளி, பொன்னாங்காணி

42) தனியார் நிறுவனங்களில் ஒன்றாக அமையாதது.
1. சிறப்பு அங்காடி 2. தனியார் வங்கிகள் 3. பிரதேச செயலகம்

43) "தன்னிறைவான ஒரு நாட்டில் சூரியனும் சந்திரனும் இருக்கும் காலமெல்லாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் ஓங்கட்டும்" எனும் ஒட்டுமொத்தக் கருத்தை எடுத்துக் காட்டுவது.
1. தேசியக் கொடி 2. தேசிய கீதம் 3. தேசிய இலச்சினை

www.lkedu.lk

44) எண்ணெய். கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகளவில் உண்பதால் ஏற்படும் நோய்.

1. நீரிழிவு 2. இரப்பையழற்சி 3. உயர் குருதியமுக்கம்

45) "நான் பெற்ற உள அமைதியை எனது பாடசாலையில் உள்ளோருக்கும் பகிர்கின்றேன்" எனும் கூற்று மனதை ஒருநிலைப்படுத்தும் செய்பாட்டுப்படிமுறைகளில் எந்தப்படிமுறைக்குரியது?

1. மலர்வு 2. பிரார்த்தனை 3. மனவுறுதி

46) இலங்கையின் தேசிய இலச்சினையில் "தன்னிறைவும் செழிப்பும்" என்பதை குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடாக அமைவது.

1. தர்மச்சக்கரம் 2. நிறைகுடம் 3. நெற்கதிர்கள்

47) தனியாகப் பயன்படுத்தும் பொருட்களை மட்டும் கொண்ட விடைத்தொகுதி

1. கைக்குட்டை, குடை, தொலைக்காட்சி
2. மூக்குக்கண்ணாடி, பற்றூரிகை, தலையணை
3. தலையணை, மின்விசிறி, கத்தரிக்கோல்

48) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்

1. குருதிச்சோகை 2. தொண்டைக்களலை 3. ஸ்கேவிநோய்

49) பெலிக்கன் கடவையில் பச்சைநிற மனித உருவம் தோன்றினால் செய்ய வேண்டியது.

1. வாகனங்கள் செல்ல, பாதசாரிகள் நிற்க வேண்டும்.
2. பாதசாரிகள் பாதையைக் கடக்க, வாகனங்கள் நிற்க வேண்டும்.
3. வாகனங்களும் பாதசாரிகளும் பாதையைக் கடத்தலாகாது.

50) அனைத்துமுண்ணி விலங்குகள் எனக்குறிப்பிடப்படுபவை

1. தாவரவகை உணவுகளை மாத்திரம் உட்கொள்பவை.
2. மாமிசவகை உணவுகளை மட்டும் உட்கொள்பவை.
3. தாவரவகை, மாமிசவகை ஆகிய இரண்டையும் உணவாக உட்கொள்பவை.

51) இரசாயனப்பசளை பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புக்களில் ஒன்றாக **அமையாதது**

1. நச்சுத்தன்மையற்ற உணவுப்பொருள் கிடைத்தல்.
2. அதிகமான பணச்செலவு ஏற்படல்.
3. பயிர்களுக்கு நன்மை செய்யும் பிராணிகளுக்கு பாதிப்பு ஏற்படல்.

52) தொடர்பாடல் கூறுகளைக் கொண்ட விடைத்தொகுதி

1. அனுப்புநர், ஊடகம், பெறுநர்
2. பெறுநர், ஊடகம், அனுப்புநர்
3. கடிதம், மின்னஞ்சல், தொலைநகல்

53) சூரிய நமஸ்காரப் படிமுறைகளில் நான்காவது படிமுறையைக் காட்டும் உரு.

1. 
2. 
3. 

www.ikedu.lk

55) இலங்கைக்கு முதன் முதலில் ஒலிப்பிக் பதக்கம் ஒன்றைப் பெற்றுக்கொடுத்தவர்.

1. சுசந்திகா ஜெயசிங்க 2. மொஹான் முனசிங்க 3. டங்கன் வைற்

56) ஆட்களால் பரவும் நோய், நுளம்பினால் பரவும் நோய், அசுத்தமடைந்த உணவினால் பரவும் நோய் என்பவற்றை முறையே கொண்ட விடைத்தொகுதி

1. சின்னமுத்து, வாந்திபேதி, யானைக்கால்
2. கொப்பளிப்பான், டெங்கு, செங்கண்மாரி
3. மலேரியா, கொப்பளிப்பான், யானைக்கால்

57. கடந்த காலங்களில் எமது நாட்டை ஆட்சி செய்த வெளிநாட்டவர்களை இறுதியில் இருந்து ஆரம்பம் வரை ஒழுங்குபடுத்தினால் வரும் விடைத்தொகுதி

1. ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர்
2. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்
3. ஆங்கிலேயர், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர்

58) வானவில்லில் காணமுடியாத நிறங்களாக அமைவன

1. கறுப்பு, வெள்ளை 2) ஊதா, கருநீலம் 3) சிவப்பு, மஞ்சள்

59) இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட குளம்

1. மின்னேரியாக்குளம் 2) அபயவாவி 3. யோதவாவி

60) **"தேசியக்கொடி ஒரு நாட்டின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றது"** இலங்கையின் தேசியக்கொடி எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

www.lkedu.lk